# பள்ளி மலர்

இரு மாதங்களுக்கு ஒருமுறை

மலர் 1
பிப்ரவரி–மார்ச் 09

வெளியீடு,
அரசு மேனிலைப் பள்ளி, குளிக்கரை,
திருவாரூர் மாவட்டம்

# எல்லாமே சாத்தியம்தான்

எல்லாமே சாத்தியம்தான், மனித மனங்களில் புதைந்து கிடக்கும் ஆக்கப்பூர்வமான படைக்கும் திறனைக்கொண்டு, எடுத்துக்கொண்ட குறிக்கோளுக்காக எந்த தடையையும் சவாலையும், கஷ்டத்தையும், துணிந்து சமாளித்து உழைக்கத் தயாரானால், எதையுமே சாதிக்கலாம். ஆணாயினும், பெண்ணாயினும் அவரவர் தம் குறிக்கோளை அடையலாம்,

இலக்குகளை எல்லாம் அடைய வேண்டுமானால், இந்தியர்களாகிய நாம் அனைவரும் ஒருமித்து உழைக்க வேண்டும். அதிலும் நம் நாட்டின் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் இருக்கும் இளைஞர்கள் முழுமூச்சோடு உழைக்க வேண்டும். மக்கள் குழுவாக ஒன்றுபட்டு, உழைத்தால் பெரிய பெரிய இலக்குகளையும் எளிதாக அடையலாம்.

இலக்கு 2020 நூலிலிருந்து
ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்கள்

****

(தனிச்சுற்றுக்கு மட்டும்--- விற்பனைக்கு அல்ல)

இருமுனைமட்டு. ஆக்கம்
கோ.கௌதமன்
முதுகலையாசிரியர்
வேதியியல்

# நன்றி ! நன்றி ! !

- எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து அரசு பள்ளிகளில் அனைத்து வசதிகளுடன் தரமான கல்வி அளிக்க உதவும் **தமிழக அரசின் கல்வித்துறை**.

- எங்களுடைய எல்லா முயற்சிகளிலும் எங்களோடு தோளோடு தோளாக நிற்கும் எமது பெற்றோர் ஆசிரிய கழகத் தலைவர் திரு **எம். கலியபெருமாள்** அவர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம்

- அனைத்து குறைகளுக்கும் உடனே செவிமடுத்து நிவர்த்திக்கும் எமது ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி **வசந்தா கணேசன்** அவர்கள்.

- மெய்ப்பு பார்த்து இதழை ஆக்கி தொகுத்த எமது முதுகலை வேதியியல் ஆசிரியர் திரு **கோ.கௌதமன்** அவர்கள்.

- அனைத்து ஆசிரிய ஆசிரிய பெருமக்கள் மாணவர்கள் மற்றும் அலுவலக நண்பர்கள்

- நேரிடையாகவும் மறைமுகமாகவும் பல உதவிகள் புரிந்த பெற்றோர்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள்

அனைவருக்கும் எங்களது நெஞ்சார்ந்த

**நன்றி! நன்றி!!**

# அணிந்துரை

வாசிப்பு பழக்கம் பல்வேறு காரணங்களால் மக்களிடை குறைந்து வரும் நேரத்தில் இது போன்ற இதழ் முயற்சி பள்ளிகளில் மிக அரிதான ஒன்று ஏன்- கல்லூரி அளவிலும் கூட எண்ணிடத்தகுந்தவையே. மாணவர்களிடம் வாசிப்பு பழக்கத்துடன் ஆக்கத்திறனை பல்வேறு பரினாமாங்களில் வெளிக்கொணர விரும்பி எமது பள்ளி ஆசிரியர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இதழாக, இதனை வடிவமைத்து இருக்கிறார்கள்.

சமூகப் பரிவுடன் மத்திய, அடித்தட்டு மாணவர்களிடன் நலன்களைப் பற்றி அதிக அக்கறையுடன் மாணவர்களை மையப்படுத்தி இந்த இதழ் ஆக்கப்பட்டுள்ளது.

இவ்விதழில் மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வத்தைத் தூண்டும் பொருட்டும், பாடங்களை அவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில், எவ்வாறு கற்பது பற்றியும், கல்வியில் அரசின் பங்களிப்பு மாணவர்களின் சமூக கடமைகள் ஒழுக்க நெறிகள் எதிர்காலத் திட்டமிடல் பற்றியும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் எடுத்தாளப்பட்டுள்ளது. மாணவர்கள் தழைப்பதற்கு நமது ஆசிரியர்களின் செழுமையான கருத்துக்கள் நிச்சயம் பயன்படும்

நமது மாணவர்களும் அன்றாட வாழ்வில் நாம் கண்டும், கேட்டும், படித்தும் அறிந்த பல உண்மைகளை அழகாகவும் சுவைபடவும் சரளமான நடையில் விளக்கி உள்ள முயற்சி பாராட்டிற்குரியது. "வலிமையுள்ள நூறு இளைஞர்களைத் தாருங்கள் வலிமையுள்ள பாரதத்தை உருவாக்கிக் காட்டுகிறேன்" என்றார் விவேகானந்தர். வலிமையான பாரதத்தை, வளமான பாரதத்தை உருவாக்க பலநூறு இளைஞர்களை இதுபோன்ற முயற்சி உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்கள் தங்களிடமுள்ள ஆற்றலை உணரவும் அவற்றை வெளிப்படுத்தி பயனடையவும் உதவக்கூடிய வகையில் செய்யப்பட்ட சிறுமுயற்சியே இவ்விதழ்.

வாழ்த்துக்களுடன்..,

அ. கு. பெ. மகாச்

தலைமையாசிரியர்

அரசு மேனிலைப்பள்ளி, குளிக்கரை

# வாழ்த்துரை



**மான்புமிகு உ. மதிவாணன்** B.A., B.L., *அவர்கள்*

தமிழக பால்வளத்துறை அமைச்சர்

பலவகை நூல்களைப் படிப்பது ஒருவரது அறிவுத்திறனை வளர்ப்பது போலவே, தமது கருத்துக்களை எழுத்துக்களாக வெளிக்கொணர்வது படைப்பாற்றலை முழுமையாக வளர்க்கின்றது.

தமது சிந்தனைகளை வாய்வழியாக எல்லோர்க்கும் தெரிவித்து விட இயலாது, தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களை எழுத்து வடிவமாக கொடுக்கும் போது அது அனைவரையும் சென்று சேர்வதுடன், அதன் அறிவுத்தாக்கமும் அதிகமாக இருக்கும்.

அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரம் அதிகரித்து வரும் இன்றைய சூழலில், அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதில் அரசும் ஆசிரியர்களும் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள்.

கல்விப்பணியை மேலும் சிறப்பிக்கும் வகையில் குளிக்கரை அரசு மேனிலைப்பள்ளியில் தொடங்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மலரப்போகும் இந்த "பள்ளிமலர்" பூத்துக் குலுங்க என் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இதழில் இப்பள்ளி ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கும் கட்டுரைகளும் தகவல்களும் அனைத்து மாணவர்களுக்கும் நிச்சயம் பயனுள்ளதாய் அமையும், அதைப்போலவே மாணவர்கள் பகுதியில் இடம்பெற்றுள்ள படைப்புகளும் மாணவர்களின் திறமைகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இது போன்ற முயற்சிகள் மென்மேலும் தொடர இப்பள்ளியின் தலைமையாசிரியருக்கும் , ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்த்துக்களுடன்.,

# வாழ்த்துரை



**திரு. எம். கலியபெருமாள், தலைவர் பெற்றோர் ஆசிரியர் கழகம்**

பாரம்பரியமிக்க இப்பள்ளி, மேனிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு இரண்டாண்டுகள் ஆகின்றன. கல்வியிலும் ஒழுக்கத்திலும் மாவட்டத்தில் முதன்மை பள்ளிகளில் ஒன்றாக திகழும் இப்பள்ளி மாநில அளவிலான தரவரிசைகளை அரசுப் பொதுத் தேர்வுகளில் பெற்று வந்திருக்கிறது ஆனால் கல்விசாரா பிற கலைத்திட்டங்களிலும் இப்பள்ளி மென்மேலும் தழைத்தோங்க வேண்டும் என்பது பேரவா.

எமது பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் தொடங்கப்பட்டுள்ள இந்த இதழ் முயற்சி மிகுந்த பாராட்டுக் குரியது. இம்முயற்சி ஆசிரியர்கள் மட்டுமின்றி மாணவர்களும் தங்கள் படைப்பாற்றல் திறனை வளர்த்துக் கொள்ளவும் அவற்றை வெளிக்கொணரவும் மேலும் ஓய்வு நேரங்களில் நேரத்தை வீணடிக்காமல் ஏதேனும் ஒருவகையில் சமுதாயத்திற்கான ஆக்கத்திற்காக பயன்படும். மேலும் மாணவர்களின் பார்வையை விசாலமாக்கி மனிதத் தொடர்புகளைப் பெருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இவ்விதழின் படைப்புகள் அனைத்தும் மிகச்சிறப்பாக வெளிவந்துள்ளன. இந்த மலர் தொடர்ந்து சிறப்புடன் வெளிவர பெற்றோர் ஆசிரியர் கழகம் முழு ஒத்துழைப்பையும் அளிக்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இந்த இதழ் ஏன் ?

"அறிவுச் சிறகை வளர்த்துக்கொள்
உலகைச் சுற்றிவரலாம்-- இலவசமாய்",

பாடப்புத்தகங்கள் பாட நுண்ணறிவு வளர்க்கின்ற போதிலும் பழகுகின்ற சூழல் மற்றும் பயனுள்ள பிற நூல்களைக் கற்பது போன்றவை உலக நுண்ணறிவைப் பெற்றிட வழிகோலும்.

படிப்பு என்பது ஒரு தொடர் நிகழ்வு, தம் வாழ்நாளில் எல்லாவற்றையும் படித்து விட்டதாக எவராலும் சொல்ல இயலாது, படித்த நூல்களின் வகை மற்றும் அதன் கற்றல் ஆழத்தை வைத்தே ஒருவரின் புலமை வெளிப்படுகிறது.

தினமும் ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொண்டேயிருப்பதால் உலகத்தில் அனைவருமே மாணவர்கள்தான், அனைவராலும் அனைத்தையும் படித்து அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லாததால் தாம் கற்றவற்றை, அறிந்தவற்றை மற்றவர்களுக்கும் தெரிவித்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

அறிவுப் பகிர்வினை ஏற்படுத்துவதன் மூலம் ஒருங்கிணைந்த மனித வளத்தினை உருவாக்க இயலும். இப்பணிகளை மேற்கொள்ளும் நாளிதழ்கள். தகவல் சிற்றேடுகள், பொத்தகங்கள் போன்ற ஊடகங்களுக்கு இடையில் இப்பள்ளியில் உள்ள செயல்திறம் மிக்க ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் திறன்களை வளர்த்தெடுத்து வெளிக்கொணர்வது அவசியமாகியது.

அந்த அவசியத்தை யோசனையாக முன்வைத்த உடனேயே மிகுந்த மதிப்பளித்து ஆர்வமுடன் வரவேற்ற தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அதை மனதில் உள்வாங்கி கருத்துக்களைக் கட்டமைத்து படைப்புகளாக்கி இங்கே தந்திருக்கிறார்கள்.


இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வரப்போகின்ற இந்த இதழ் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் படித்தல், படைத்தல் திறன்களை மேம்படுத்தி வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் நிகழ்வுகள் திறம்பட நடைபெற உதவும். அரசுப் பள்ளியில் துவக்கப்பட்டிருக்கும் இந்த முயற்சியின் மூலம் மென்மேலும் சிறந்த படைப்புகள் உருவாகி சிறந்த பல்-திறன் பெற்ற மாணவர் சமுதாயம் உருவாகும் என்பது உறுதி.

கோ,கௌதமன்
முதுகலை வேதியியல் ஆசிரியர்

## உள்ளே...,


| | பக்கம் |
| --- | --- |
| மாணவனாகப் பெருமைப்படு-- தலைமையாசிரியர் பகுதி | 1 |
| அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரம் | 3 |
| தேர்வு பயமா பலமா | 5 |
| The Means and ways to become a Professional | 7 |
| 10,12 மாணவர்களுக்கான வழிகாட்டி | 9 |
| பள்ளி விழாக்கள் | 12 |
| அறிவியலை எளிமையாகப் புரிந்துகொள்ளும் வழிமுறைகள் | 13 |
| இயற்கைக்கு எதிரான மனித நடவடிக்கைகளும், விளைவுகளும் | 15 |
| ஆசிரியர் கவிதைகள் | 18-20 |
| என்னால் எப்படி முடிந்தது 10ம் வகுப்பு முதலிட மாணவி பேட்டி | 21 |
| ஓவியங்கள் பக்கம் | 23 |
| நகைத்து மகிழ்வோம் | 24 |
| அறிவோம், அறிவோம் | 25 |
| மாணவர் கவிதைகள் | 26-27 |
| அடுத்த இதழில் | 28 |

# Head Master's Page



## Oh! To be a Student

Dear Students

I consider this my privilege to address all of you through these columns. Gone are the days when the students had to face many an inconvenience both in and out side the school campus. one had to trek a long distance to reach the school. Even I as a school boy trekked some five or six kilometer to reach the school. My father, I learnt , had to travel some 30 kms to reach his school at pudukottai. Now realising that the well informed and literate citizens are a pre-requiste for a healthy and strong democracy. Both the central and state governments are establishing schools in every hamlet. So these days there is a school in easy reach for everyone.

Efforts are made to make the school campus attractive and comfortable to the students. Thanks to Sarva Shiksha Abhiyan scheme infrastructure facility in every school has gone up by leaps and bounds. classes under the greenwood trees are a thing of the past. Toilet and drinking water facilities are properly attended to, to make the stay in the school campus as comfortable as possible.



contd..,

The students of today are going through a golden era. The Governments are attending to the all the needs of the students.

The Nutritious noon meal though introduced a few decades ago, is now made truly nutritious with additional eggs and pulses. All the students, irrespective of caste and creed are provided with free books and free uniforms. Free cycles are supplied to all those who join higher secondary first year. Free note books, free bus passes for long distance students, incentives for Sc/St and MBC girls joining sixth standard, Scholarship for XI and XII th Standard Students, tuition fee reimbursement also deserve special mention. So it goes without saying that every need of the children both physical and psychological is taken care of. Subjects are handled by efficient and well trained- both pre-service and in-service- teachers.

Now it is the duty of the students to make the best use of the all concessions and facilities made available to them and study well. Especially they are expected to pay special attention to science and maths. In addition to the subjects taught the students should develop soft skills like spoken English. If the students study the subject with understanding and application and if they develop fluency in English it is certain that they will go to places. So put in your best with self-confidence, you will come out with flying colours.

With Best Wishes

# அரசு பள்ளிகளில் கல்வியின் தரம்



கு. துரைராஜ், முதுகலையாசிரியர் விலங்கியல்

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்பது ஔவையாரின் வாக்கு, காரணம் முன் காலத்தில் கல்வி கற்பதற்கு பொன், பொருள், இனம் என சமூக வேறுபாடுகள் நிறைந்து காணப்பட்டது, குருதட்சணையாக நிறைய பொருள்கள் கொடுக்க இயலாத நிலையில் பல தரப்பு மக்களின் வாழ்க்கை நிலையில் கல்வி ஒரு எட்டா கனியாகவே காணப்பட்டது, இதுபோன்ற பாகுபாடுகள் நிறைந்து இருந்த கல்வி கற்கும் முறை மறைந்து இம் மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு என்பதினை வலியுறுத்தும் விதமாக ஏற்பட்டவையே நமது அரசு பள்ளிகளாகும்.

**சிறப்புகளில் சில.,**

🏆 ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளைக் கண்ணுற்றால் அதிக மதிப்பெண்கள் மற்றும் தேர்ச்சி விழுக்காடு அடிப்படையில் நம் அரசுப் பள்ளி மாணவர்களே முதன்மையாக உள்ளனர்.

🏆 மற்ற பள்ளிகளால் சேர்த்துக்கொள்ளப்படாத மற்றும் தேர்வில் தோல்வியுற்று மிகக் குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர்களையும் ஆசிரியர்களின் கடுமையான முயற்சிகள் மூலம் தேர்ச்சி பெறவைப்பது சிறப்பிற்குரிய செயலாகும். ( அரசுப் பள்ளிகள் சிலைகளுக்கு வண்ணம் பூசுபவர்கள் அல்ல சிலைகளை உருவாக்குபவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை).

🏆 மாணவர்களின் திறன்களைக் கண்டுணர்ந்து அவர்களின் செயல்பாடுகளை அமைத்தால் மட்டுமே கவனச்சிதறலின்றி கற்றலில் ஈடுபடுவார்கள் இந்த மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு துவக்க வகுப்புகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள செயல் வழிக் கற்றல் முறையும் (ABL), உயர்துவக்க வகுப்புகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள ALM முறையும் மாணவர்களின் வருகை மற்றும் சேர்க்கை சதவீதத்தினை அதிகபடுத்தி பெரிய வெற்றிகளைக் கண்டுள்ளது.

தொடர்கிறது.,

அறிவியலின் வளர்ச்சியினை நுகரக்கூடிய வாய்ப்பினை கிராமப்புற மாணவர்களும் பெறும் வகையில் கணினிக் கல்வியும் இணையதள வசதிகளும் அரசுப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டு குறுந்தட்டுகள் (CDs) மற்றும் ஒளிவீழ்த்திகள் (Projectors) மூலம் பாடங்களைக் கற்கும் முன்னோக்கிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொட்டதிற்கெல்லாம் பணத்தைக் குவிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் , கல்விக் கட்டணம், வாகனங்கள், போக்குவரத்துக் கட்டணம், மதிய உணவு, தேர்வுக் கட்டணம், என அனைத்தையும் இலவசமாக அளித்து கல்வியில் தரத்தினை அள்ளித் தருவது அரசுப் பள்ளிகள் மட்டுமே.

மேற்கண்ட அனைத்து கட்டமைப்புகளையும் ஒருங்கே பெற்றுள்ளது நமது அரசு மேனிலைப் பள்ளியாகும். இப்பள்ளியில் நமது தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் சீரிய முயற்சியால் கல்வி மற்றும் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் இதுவரைப் பெற்றுள்ள முன்னேற்றங்களும் வெற்றிகளும் அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரம் என்றும் நிலையானது என்பதை உறுதி செய்கிறது.

*****

## ஒளிந்த முரண்பாடு

திரையரங்குகளில் அலைமோதும் கூட்டம்
பூங்காக்களில் நிறைந்த கூட்டம்
தொலைக்காட்சி எதிரே ஒட்டு மொத்த குடும்பம்
விளையாட்டுத் திடலில் வீரர்களின் கூட்டம்
மதுபானக் கடையில் கட்டுக்கடங்காத கூட்டம்
திரும்பிய திசையெங்கும் கூட்டம் தவிர்த்து
நூலகம் சென்றால்
வெறிச் சோடிக்கிடக்கின்றது
அமைதியாய் அந்த
அறிவுக்கூடம்.

நன்றி "உண்மை" இதழ்

# தேர்வு பயமா? பலமா?




கோ. விசுவநாதன் முதுகலை இயற்பியல்

பெரும்பாலும் தேர்வுகளை பயத்தோடும் நடுக்கத்தோடும் எதிர்கொள்பவர்களே அதிகம். இவர்கள் தேர்வுகளுக்கு முன்னாலும் பின்னாலும் மனம் மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்படுவதோடு தேர்வுகளை சோதனைகளாக எப்படியாவது கடந்து விட வேண்டிய கண்டங்களாக நினைக்கிறார்கள். தேர்வைக் கண்டு அஞ்சும் நிலைக்கு, தரமான தயாரிப்பின்மையும் தன்னம்பிக்கையின்மையுமே தவிர வேறென்ன காரணம் இருக்க முடியும்.

தேர்வுகளை தனது பாடத்தில் தான் பெற்றுள்ள திறனை பிறருக்கு எடுத்துக்காட்ட கிடைத்த அரிய வாய்ப்பாகக் கருதி நம்பிக்கையோடு எதிர்கொள்ளவேண்டும், ஓரளவு தேர்வு பதட்டம் தவிர்க்க முடியாததுதான் என்றாலும், இவ்வகையான குறைந்த அளவு தேர்வு பதட்டம் உளவியல் பூர்வமாக தேர்வினை சிறப்பாக எழுதிட உதவியாக இருக்கும்.

தேர்விற்கு எப்படி தயார் செய்யலாம் ?

- படிப்புக்கான கால அட்டவனை அமைத்தல்
- புரிந்து கொண்டு கற்றல்
- வாசிப்பு வேகத்தை அதிகப்படுத்துதல்
- படித்தவற்றை நினைவு கூர்தல்
- படித்தவற்றை பல முறை எழுதி பார்த்தல்

ஆகியவை தேர்வில் வெற்றி கொள்ள பேருதவியாக இருக்கும்.சரியான தயாரிப்பும் திட்டமிடுதலும் கடின உழைப்பும் மேற்கொண்ட ஒரு சராசரி திறனுடைய மாணவனால் எந்த வித கூடுதல் முயற்சியும் மேற்கொள்ளாத மீத்திறனுடைய மாணவனைக் காட்டிலும் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற முடியும்.

தேர்விற்கு தயார் செய்தல் என்பதன் பொருள் தேர்வினை சந்திக்க, தேர்வில் எவ்வகையான வினாக்களுக்கும் விடையளிக்க ஆயத்தமாக இருக்கிறோம் என்பதாக இருக்க வேண்டும்.

பாடப்பகுதியை பல கோணங்களில் பகுத்து, ஆராய்ந்து, தெளிந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

தேர்விற்கு தயாரிக்கும் நாட்களில் இயல்பான வாழ்க்கை வாழ முயலவேண்டும். வழக்கம் போல சாப்பாடு, தூக்கம், விளையாட்டு என இயல்பாக இருத்தல் நலம்.

தேர்வு காலங்களில் எளிதில் சீரனமாகும் உணவுப்பொருட்களை தேவைக்கு சற்று குறைவாக உட்கொள்ள வேண்டும். இது உடல் நலம் காக்க பயன்படும்

இரவு நேரங்களில் தொலைக்காட்சி, விளையாட்டு என பொழுதைக் கழித்து விட்டு இரவில் நீண்ட நேரம் கண்விழித்து படிப்பது தவிர்க்கப்பட வேண்டும். இதனால் உடல்நலன் கெட்டு நினைவாற்றலும் குறைகிறது. எனவே இரவில் 8.30 மணிக்கு உறங்கச் சென்று அதிகாலையில் 4.00 மணிக்கு எழுந்து பயில்வது மிகவும் நல்ல பலனைத் தரும்.

பாடப்பகுதியினைப் படித்த பிறகு தேவைப் படின் சிறிது நேரம் பொழுதுபோக்கு, விளையாட்டு என ஈடுபடுவதில் தவறில்லை அது மூளையின் செயல்திறனை அதிகரிக்க உதவும்.

நாம் சிறப்பாகக் கற்றுக்கொள்ளும் நுட்பங்களில் தேர்வுகளும் ஒன்று. தேர்வுகளே நம்மை நன்கு கற்றுக்கொள்ள செய்கின்றன. தேர்வுகள் படிப்பதற்கு பெருமளவு ஊக்கம் தரக்கூடியவை. நமது புரிந்துணர்தலை உணர்ந்து கொள்ள தேர்வுகளே பக்கபலமாக அமையும் எனவே தேர்வுகளைக் கண்டு பயம் கொள்ளாமல் அதை பலமாகக் கருதுங்கள். வெற்றிகளைக் குவிக்க என் வாழ்த்துக்கள்.


❋❋❋

*மழையே போ!*

**வெடிப்புற்ற நிலம்!**
**வானம் பார்த்தான் உழவன்!**
**அவனது**
**ஆங்கிலப் பள்ளிக் குழந்தை**
**பாடியது "ரெயின் ரெயின் கோ அவே"**

**கூ.ரெ.தமிழ்மணியின்**
**"கண்ணீரில் எரியும் கனவுகள்" நூலிலிருந்து**

# THE MEANS AND WAYS TO BECOME A GREAT PROFESSIONAL



K.Manavalan PG Assistant. Maths

According to Vivekananda " We are responsible for what we are. Whatever you think, that you will be". We can do anything and everything. Faith, Faith in ourselves. This is the secret of greatness.

Succeeding in a profession won't occur in a single day we have to put our whole heart and soul into it. There is no shortcut to become a professional. To climb to the top, there are no lift or escalators. There are only stairs leading from one level to other. There can be no success at all without work and more work. Hard work alone will produce results. There is no substitute for hard work.

Getting skilled in a particular field does not depend upon one quality or characteristic but a combination of many. Talent is not a limitation to professional competence and expertise. This includes creativity, adoptability, organising capacity, leadership quality and related dynamic qualities.

Further, it is absolutely necessary to read professionaly and widely. reading helps us to learn things from experts. It help us to avoid mistakes.

One cannot become a great professional overnight. We have to start at the days of the mountain before we climb its highest peak. We may have several goals in our profession but can work on one at a time excluding others.

Contd.,

Decision making is the very important skill that a professional needs A wrong decision taken at right time or right decision taken at wrong time won't yield favourable results. If we succeed in attaining one goal, we will automatically be motivated to work for the next one and so on. Thus we will acquire professionalism as a habit.

Personality is an integral part of a good professional a great professional always look, talk and act like a winner. Also positive thinking is very essential to organize, control, channelize our thoughts. A positive body language, a positive outlook make other walk in our foot-steps.

According to psychologist like carl Rogers Mccland self motivation is more important than anything else for achieving master in a field. This enables ordinary one to perform extraordinary deeds. A good professional always thinks of profession, images profession, desires profession, dreams profession and work hard and long for success. Totally they love their profession.

Passions, perseverance and diplomacy are the important ingredient to persist against all odds and obstacles. Weak minded people meet only failure in life. We should be brave and dashing to get success.

Experts do as much as anybody else in the same field and group and then A LITTLE MORE, A LITTLE DIFFERENTLY. They put extra efforts than their competitors in the field.

Why don't we achieve excellence in our field, for that we need to broaden our vision. We should be getting closer to our aims everyday. Let us all live with a direction and sense of purpose. We will make the things reality which was a dream yesterday.

Wishing You All The Way

# நிச்சயம் வெல்லலாம்

12 ம் வகுப்பு மாணவர்களுக்கான தன்னம்பிக்கை தகவல்கள்



ந. குமார் முதுகலை ஆங்கிலம்

என் அன்பான 12 ம் வகுப்பு மாணவர்களே, எல்லோரும் பரபரப்பாக இருக்கும் நேரம், தேர்வு எனும் வயலில் மதிப்பெண் அறுவடை செய்ய தயாராகிக்கொண்டிருக்கிறீர்கள். தேர்வில் வெற்றி பெற முன் வாழ்த்துக்கள். அதற்கு முன் உங்களிடம் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கும் ஒரு சில வழிமுறைகள் பற்றிய செய்திகளை பரிமாறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த 12 வருடமாக படிப்பைத் தவிர வெளி உலகின் அறிவியல், பொருளாதார வளர்ச்சியைப் பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்த நூற்றாண்டில் இந்தியா உலக வல்லரசாக மாற தயாராகிவிட்டது. நம் நாடு மனித வள மேம்பாட்டின் வளர்ச்சியால் உலக நாடுகளின் முதலீட்டு களமாக மாறியிருக்கிறது. படித்து முடித்த பின் அரசு வேலைகளுக்காக அலைந்து திரிந்த காலம் போய் அவனின் திறமையைக் கண்டு பெரும் தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் கல்லூரி வளாகத்திலேயே வந்து பணி ஆணையை வழங்கும் நிலை வந்துவிட்டது. இளம் வயதிலேயே பெரும் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

இளம் வயதிலேயே முன்னேறியவர்கள் எப்படி ஜெயித்தார்கள், அந்த ரகசியம் தெரியுமா உங்களுக்கு, வெற்றி பெற்ற அனைவரும் நேரத்தை முதலீடாக்கி படிப்பை உழைப்பாக்கினர். உடனே உன் மனதில் அவர்கள் எல்லாம் மருத்துவம், பொறியியல் போன்ற படிப்பை படித்திருப்பார்கள் என்ற எண்ணம் தோன்றியிருக்குமே, இதில் பகுதியளவுதான் உண்மை , படிப்பு என்பது வரையறைக்குட்பட்டது, படிப்பு என்பது ஒரு பாடத்தின் மீது முழுமையான அறிவை வளர்த்துக் கொள்வதாகும். எந்த ஒரு கல்வியும் குறைத்து மதிப்பிடப்படுவதில்லை. அப்படி மதிக்கப்பட்டிருந்தால் அரசாங்கம் அதை அனுமதித்திருக்காது.



தொடர்கிறது..

கல்லூரியில் நீ விரும்பும் பாடத்தைப் படிப்பதற்கு உனது 12 ம் வகுப்பு மதிப்பெண்கள் மட்டுமே அங்கீகாரம் பெற்றுள்ளது. அதிக மதிப்பெண் பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

கடின உழைப்பு, முயற்சி இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மலைத்து விடாதே இவை யாவும் உன்னுடைய ஒவ்வொரு செயலிலும் நிறைந்து உள்ளவைதான். உயிரினங்கள் கூட கடின உழைப்பு மற்றும் போராட்ட குணத்தால் மட்டுமே அன்றாட இரையை பெறுகின்றது.

படிப்பு என்பது விளையாடுவதைப் போல், பேசுவதைப் போல் அன்றாட செயலாக இருக்க வேண்டும். தினசரி படிக்கவேண்டியதை தொலைக்காட்சி பார்ப்பதை போல் மகிழ்ச்சியுடன் செய்திருந்தால் தேர்வு பயம் என்ற வார்த்தைக்கே இடமில்லை. தற்சமயம் உன்னிடம் விடப்பட்டிருக்கும் பணி அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைவது மட்டுமே.

தேர்வுகள் முடிந்ததும் அடுத்த என்ன மேற்படிப்பை மேற்கொள்வது பற்றி முடிவெடுக்க வேண்டும், அதைப் பற்றிய சில விவரங்களை இப்போதே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதெல்லாம் கல்லூரியில் நுழையும்போதே வருங்காலத்திற்கு அந்த படிப்பு எந்த அளவிற்கு பயன்படும் என்ற அனைத்து தகவல்களும் பெற்ற பிறகே தகுதியான பிரிவினை தேர்ந்தெடுக்கின்றனர். நீ தேர்ந்தெடுக்கும் பிரிவானது உனது விருப்பம் மற்றும் சூழலைப் பொருத்ததாகும்.

இன்றைய காலகட்டத்தில் வேலை பெறுவதற்கு பாட அறிவு மட்டும் போதாது திறமையும் தேவை, ஆமாம், அறிவு என்றால் என்ன திறமை என்றால் என்ன? உன் பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட அளவு அறிவு கொடுக்கப்பட்டுள்ளது, கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட அறிவைக்கொண்டு மென்மேலும் நீயாக தேடிச்சென்று வளர்த்துக்கொள்ளும் அறிவே திறமை என்பதாகும்.

நமது பாரத முதன்மை அமைச்சர் கூறியதைப் போல இந்தியாவில் 20 சதவீத இளைஞர்கள் உள்ளனர் இது வேறு எந்த நாட்டிற்கும் கிடைக்காத ஒரு வரப்பிரசாதமாகும். நம் நாட்டு இளைஞர்கள் மூலம் இந்தியா வல்லரசாக மாறும் என்று திரு. அப்துல்கலாம் அவர்கள் திண்ணமாகக் குறிப்பிடுகிறார்.

உலகத்தில் உள்ள நவீன வசதிகள் அனைத்தையும் நீயும் அடைய வேண்டுமென்றால் வாழ்க்கைப் போட்டி என்ற ஓட்டப் பந்தயத்தில் ஓடி நீ வெற்றி பெற வேண்டும். ஓட்டம் தடை பட்டாலோ, ஒதுங்கி நின்றாலோ மற்றவர்களின் முன்னேற்றத்தை மட்டுமே உன்னால் கண்டு ஏங்க முடியும்.

தொடர்கிறது.,

# ஆசிரியர் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள்

## மலர் பற்றிய மாணவர் கருத்துக்கள்
(மாணவர் பெயர் தமிழ் முன்னெழுத்துடன், கருத்துக்கள்)

இந்த இதழில் 12 ம் வகுப்பிற்கு பிறகு மேற்கொண்டு என்ன படிக்கலாம் என்பது பற்றிய சுருக்கமான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது, இதைப்பற்றி மேற்கொண்டு தகவல்கள் பெற என்னையும் மற்ற ஆசிரியர்களையும் அணுகலாம்.


முன்பெல்லாம் படித்தவர்கள் வேலைக்காக தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றவற்றை இணைத் தகுதிகளாகக் கொண்டிருந்தனர். இன்று கணினி இல்லாமல் அணுவும் அசையாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எந்த துறையைத் தேர்ந்தெடுத்து படித்தாலும் கணினியில் புலமை பெறுவது மிகவும் அவசியம். இன்று தமிழில் முதுகலைப் பட்டம் படித்தவர்கள் கணினி மென்பொருள் துறையில் காலூன்ற முடிகிறது

மற்ற சில துறை படிப்புகள்

| மருத்துவம் | பொறியியல் | இளங்கலை ( BSc) | |
|---|---|---|---|
| MBBS | BE கம்ப்யூட்டர் சயின்ஸ் | கம்ப்யூட்டர் சயின்ஸ். தகவல் மேலாண்மை. தகவல் தொழில்நுட்பம். | உணவுத் தொழில் நுட்பம் |
| BDS பல் மருத்துவம் | BE எலெக்ட்ரிக் அன்டு எலெக்ட்ரானிக் | கணிதம், வேதியியல். இயற்பியல், உயிரியல்., | Hotel மேலாண்மை |
| ஹோமியோபதி மருத்துவம் | BE தகவல் தொழில் நுட்பம் | காட்சித் தகவலியல் | மானுடவியல் |
| ஆயுர்வேத மருத்துவம் | BE நானோ தொழில்நுட்பம் | வேளாண்மை, தோட்டக்கலை, வானவியல், மனையியல் | பிளாஸ்டிக் தொழில்நுட்பம் |
| யுனானி மருத்துவம் | இன்னும் பல., | B,Tech வேளாண்மை பொறியியல். | சுற்றுச் சூழல் அறிவியல் |
| சித்தா மருத்துவம் | | B,F Sc மீன் வளம் | இன்டீரியர் டெக்கரேசன் |
| Pharm மருந்தியல் | | கடலியல் | :பேசன் டெக்னாலஜி |
| சியோதெராபி | | உயிர்தொழில்நுட்பம் | இதழியல் |
| VSC கால்நடை மருத்துவம் | | நுண்ணுயிரியல் | சுற்றுலா |
| இன்னும் பல., | | உயிர் வேதியியல் | புவியியல் |
| | | மன்னியல் | ஊட்டச்சத்து மற்றும் உணவுக்கட்டுப்பாடு |
| | | | இன்னும் பல., |

பாலிடெக்னிக் படிப்புகள் — சிவில், மெக்கானிக், இன்பர்மேசன், கணினி பட்டய படிப்புகள். ஆசிரியர் படிப்பு DT,Ed., உடற்கல்வி B.P.Ed., இன்னும் பல.,

# பள்ளி விழாக்கள்



குடியரசு தின விழாவில் ஊர் பெரியோர்கள் பெருந்திரளாக வந்து சிறப்பித்த காட்சி



நம் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழாவில், மாணவி ஆர்வமுடன் பங்கேற்ற காட்சி

# அறிவியலை புரிந்து கொள்வதற்கான எளிய வழிமுறைகள்

கோ. கௌதமன் முதுகலை வேதியியல்


இந்த இதழின் இந்த பகுதியின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

அறிவியல் பாடத்தை கற்பிக்கும்போது மாணவர்கள் கற்றுக் கொள்ளும் வேகம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மற்ற பாடங்களைக் காட்டிலும் கற்பித்தலுக்காக எடுத்துக்கொள்ளும் வழிமுறைகள் பெருமளவு புரிதல் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அறிவியலில் ஒரு சில தலைப்புகளை புரிந்துகொள்ள அல்லது விளக்க எளிய வழிமுறைகளைக் கையாளுவதைப் பற்றிய முயற்சியாக இந்த தொடர் வடிவமைக்கப்படுகிறது.


அறிவியல் என்பது அறிந்து புரியும் பாடம் அல்ல அது புரிந்து அறிவது, எனவே பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு செய்தியும் தம் வாழ்நாளில் என்றாவது ஒருநாள் கடந்து செல்பவையாகத்தான் இருக்கும். எனவே இந்த பாடத்தை வாழ்க்கை நடைமுறைகளுடன் தொடர்பு படுத்தி, பயன்படுத்தி (Application) கற்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, கத்தரிக்கோல், பாக்குவெட்டி, தூண்டில் இவற்றில் மூன்றாம் வகை நெம்புகோல் எது என்று வினா எழுப்பினால் உடனே என்ன செய்வோம் பாடபுத்தகத்தின் பக்கங்களை புரட்டுவோம் அல்லது நினைவில் இருந்தால் சரியாக சொல்வோம், இவ்வாறு கூறப்படுகின்ற பதில்கள் இரண்டுமே நிலையானது அல்ல காலப்போக்கில் மறந்து விடும்.


சரி இதை மறக்காமல் எப்படித்தான் நினைவில் வைத்துக்கொள்வது. இந்த ஆபத்திற்கு உதவுவதுதான் ஆபதி என்ற சுருக்கச் சொல் அது என்ன ஆபதி, கவனமாக மேற்கொண்டு செல்வோமா! இதற்கான விடையைக் காணும் முன்பு மேற்சொன்ன கருவிகளை பார்த்திருக்கிறாயா? பார்க்காவிட்டாலும் கீழ்க்கண்ட படத்தைப் பாருங்கள்,



கத்தரிக்கோல்



பாக்கு வெட்டி



தூண்டில்

ஒரு நெம்புகோலில் மூன்று வகை புள்ளிகள் உண்டு என்று நமக்கு தெரியும் அவை ஆதாரப் புள்ளி, பளு, திறன். இந்த புள்ளிகளில் நடுவில் வரும் புள்ளியை வைத்து நெம்புகோல் வகைப் படுத்தப்படுகிறது.


முதல்வகை ஆதாரப் புள்ளி நடுவில் வருவது

இரண்டாம் வகை பளு நடுவில் வருவது


மூன்றாம் வகை திறன் நடுவில் வருவது

சரி, மேற்கூறிய கருவிகளைப் பார்ப்போமா


மேற்சொன்னவற்றில்




முதல் வகை
(ஆதாரப் புள்ளி
நடுவில் உள்ளது)




இரண்டாம் வகை
(பளு நடுவில் உள்ளது)




மூன்றாம் வகை
(திறன் நடுவில்
உள்ளது)

**ஆ ப தி**

இப்போது சொல்லலாமா ? இரண்டாம் வகை நெம்புகோல் பாக்குவெட்டி என்று. இதை மற்ற கருவிகளுக்கும் பயன்படுத்தி வகையினை தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து மேலும் ஒரு எடுத்துக்காட்டை பார்க்கலாமா ?

சூரியனை சுற்றிவரும் 9 கோள்களில் 5 வது கோள் எது ?, கேட்டதும் ஒவ்வொருவரும் ஒரு வரிசை சொல்வீர்கள்தானே, சரி இதை எப்படி மறக்காமல் வரிசைப் படுத்துவது

இதற்கு, நாம் பயன்படுத்தும் கிழமைகளே போதுமானது. முதலில் புதன் என்ற கிழமையில் தொடங்கு பின் ஒன்று விட்டு ஒன்று கிழமைகளை எழுதவும்

**புதன், வெள்ளி, ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி**

(பூமி) (ஞாயிறை பூமி என வைத்துக்கொள்)

அதற்கு பிறகு யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ.

இப்பொழுது 5 வது கோள் வியாழன் சரிதானே., என்ன மகிழ்ச்சிதானே ? உங்களுக்கு ஏதேனும் பகுதிகள் புரிந்து கொள்வதற்கு கடினமாக இருந்தால் அந்த பகுதிகளை எழுதி எடுத்து வாருங்கள், அதை எளிமையாக மாற்ற முயலுவோம். அடுத்த இதழில் எளிய வழிகளுடன் மீண்டும் சந்திப்போம்.,

# இயற்கைக்கு எதிரான மனித நடவடிக்கைகளும் அதன் விளைவுகளும்



**செ. வேலவன் இளங்கலை விலங்கியல்**

மனிதன் தோன்றிய காலம் முதல், இயற்கையை தனது சுயநலத்திற்காக பயன்படுத்தி வருகிறான். இயற்கைக்கு எதிரான தனது நடவடிக்கைகள் மூலம் சுற்றுசூழலை மாசுபடுத்துவது மட்டுமின்றி, மனித குல அழிவிற்கும் வழிகோலியுள்ளான்.

இயற்கையின் எதிரி மனிதன்

கற்கால மனிதன் நாகரிகமின்றி இருந்தான் உணவு உறைவிடத்திற்காக காடுகளில் வாழ்ந்தான். வாழ்க்கைத் தரம் உயர உயர ஆசைகள் அதிகரித்தன, பெரிய தொழிற்சாலைகளையும் வாகனங்களையும் இயக்க ஆற்றல் தேவைப்பட்டது, அதற்காக நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கைவாயு போன்ற புதை படிவ எரிபொருட்களை அளவிற்கு அதிகமாக எரித்தான், அதன் விளைவுதான் மாசுபாடு. காற்று, நீர், நிலம் என அனைத்திலும் வேண்டாத பொருட்கள் கலந்து மாசடைகின்றன, இதனால் இயற்கை தனது இயல்பை இழந்து விட்டது.

புவி வெப்பமடைதல்

நமது புவி சூரியனிடமிருந்து வெப்பத்தை பெறுகிறது. இதனால் புவியின் வெப்பம் மாறாமல் இருந்தது. ஆனால் நாம் புதைபடிவ எரிபொருளை அதிகமாக எரிப்பதால் கார்பன் டை ஆக்ஸைடு போன்ற சில வாயுக்கள் வளிமண்டலத்தில் அதிகரித்துவிட்டன. இவை பூமியைச் சுற்றி ஓர் போர்வையாக அமைந்து வெப்பம் வெளியேறாமல் தடுக்கின்றன. இதனால் பூமியின் வெப்பநிலை 10 ஆண்டிற்கு 0.3 என அதிகரித்துள்ளது.

வெப்பநிலை அதிகரித்தால் என்ன ?

நமக்குதான் மின்விசிறி இருக்கிறதே என்று கேட்கலாம். ஆனால் வெப்பநிலை சிறிதளவு உயர்ந்தாலும் துருவப்பகுதிகளில் உள்ள மிகப்பெரிய பனிக்கட்டி பாளங்கள் உருகும். இதனால் கடல் மட்டம் உயரும். அறிவியல் வல்லுனர்களி கணக்கீட்டின்படி 2030 ஆம் ஆண்டுகளில் கடல் மட்டம் 18–28 செமீ வரை உயரும்



தொடர்கிறது..

இந்த உயர்வு கடற்கரை ஒட்டிய மிகமுக்கிய நகரங்களை (நியூயார்க், மும்பை) நீரில் மூழ்கடிக்கும், அபாயம் உள்ளது, அதுமட்டுமன்றி நீர் தட்டுப்பாடு, மழைப்பொழிவு குறைவு அதிக குளிர் அல்லது அதிக வெப்பம் என நிலைத் தொகுப்பில் நிறைய மாற்றங்கள் ஏற்படும், மனித நலம் குறையும், நோய்கள் மிகும்.

ஓசோன் ஓட்டை

ஓசோன் படலம் என்பது பூமியிலிருந்து 60 கிமீ தொலைவில் வளிமண்டலத்தில் சுமார் 3 மிமீ தடிமன் கொண்ட ஓர் அடுக்கு. இவ்வடுக்கு நம் அனைவரையும் பாதுகாக்கிறது. எப்படி தெரியுமா? சூரியனிடமிருந்து வரும் புற ஊதாக் கதிர்களைத் தடுத்துவிடுகிறது. ஆனால் சில நறுமணப் பொருட்கள், தலைமுடி தெளிப்புகள், முகச்சவர பசைகள், குளிர்பதன பெட்டியில் பயன்படும் குளோரோ புளோரோ கார்பன் போன்றவை இந்த ஓசோன் மூலக்கூறுகளை அழிக்கின்றன. இதனால் அண்டார்டிகா பகுதியில் பல நூற்றுகணக்கான கிமீ அளவில் ஓட்டை ஏற்பட்டுள்ளது. இதனால் சுலபமாக பூமிக்குள்ளே நுழையும் புற ஊதாக் கதிர்கள் மனிதனை தாக்குகின்றன. இதனால் தோல் புற்றுநோய் நோய் எதிர்ப்பு திறன் குவைு ஏற்படுகிறது. மேலும் பயிர் மகசூல் குறைவு, காற்றின் தரம் குறைவு, கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்பு போன்றவை ஏற்படுகின்றது.

பூச்சி கொல்லிகள் மனித கொல்லிகள்

பூச்சிகளை அழிப்பதற்காக பயிர்களுக்கு போடப்பட்ட பூச்சிக்கொல்லிகள், வேதிப்பொருட்கள், எடுத்துக்காட்டாக டி.டி.டி, மாலத்தியான் போன்றவை உணவு மற்றும் நீரின் வழியே தாவர மற்றும் விலங்கு உடலில் சேகரம் ஆகின்றன, அவற்றை உண்ணும் மனிதனையும் பிற உயிரிகளையும் மேலும் பாதிக்கின்றன.

அழிவில்லா பிளாஸ்டிக்

பிளாஸ்டிக், பாலிதீன் மற்றும் பி.வி.சி போன்ற செயற்கை பலபடிகள் எவ்வாறு நமக்கு தீங்கு செய்கின்றன என பார்ப்பதற்கு முன் மண்ணில் இருக்கும் நமது நண்பர்களைப் பற்றி தெரிந்துகொள்வோம். இறந்த உடல்கள் மற்றும் கழிவுகளை சிறிது காலத்திற்கு பின் பார்த்திருக்கிறாயா? அவை அங்கு இருப்பதில்லை ஏன்? மக்கி மண்ணோடு கலந்து விடுகின்றன. இதற்கு காரணம் இயற்கை துப்புரவாளர்களான நுண்ணுயிர்கள்தான். அவை கழிவுகளை சிதைக்கின்றன. சிதைந்தவை மீண்டும் தாவரங்கள் பயன்படுத்த ஏதுவாகின்றன. ஆனால் செயற்கை பலபடிகளை இவற்றால் சிதைக்க இயலாது.



தொடர்கிறது..

மனித பயன்பாட்டிற்கு பின் குப்பைக்கு செல்லும் பிளாஸ்டிக், பாலித்தீன் போன்றவை பல நூறு ஆண்டுகள் புவியில் தங்குகின்றன. இதன் விளைவு மண்ணின் தரம் பாதிப்பு, மண் அரிப்பு, மண் உயிர்கள் அழிவு போன்றவை ஏற்படுகிறது.

அணு சக்தி ஆக்குமா ? அழிக்குமா ?

அணுவை பிளப்பது அல்லது சேர்ப்பதன் மூலம் கிடைக்கும் அளப்பறிய ஆற்றலைக் கொண்டு நாம் மின்னாற்றல் பெறுகின்றோம், ஆனால் அதே அணு ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு அணு ஆயுதங்களும் தயாரிக்கப்படுகின்றன. இரண்டாம் உலகப்போரில் ஜப்பானிய நகரங்களான ஹிரோசிமா, நாகசாகி, ஆகிய இடங்களில் வீசப்பட்ட அணுகுண்டுகள் பல இலட்சக் கணக்கானோர் உயிரை பறித்தது. இதற்கு காரணம் அணுகருபிளவில் வெளிப்படும் கதிர்வீச்சுகள்தான் ரசியாவில் ஏற்பட்ட செரினோபில் அணு உலை விபத்து ஆயிரகணக்கானோரை கொன்றது.

இயற்கையை பாதுகாப்பது எப்படி ?

- புதை படிவ எரிபொருள்களுக்கு மாற்று எரிபொருட்களான சூரிய சக்தி, காற்றாலை போன்றவற்றைப் பயன்படுத்தலாம்
- வேதி உரங்கள் பயன்படுத்துவது மேலும் தடைசெய்யப்பட்டு உயிரி உரங்கள் உற்பத்திக்கு சலுகைகள் வழங்கப்படவேண்டும்.
- பாலித்தீன் பைகளுக்கு பதில் பனை ஓலை, வாழை இலை, சணல் இவற்றால் தயாரிக்கப்பட்ட பைகளைப் பயன்படுத்தலாம்.
- கடையிலிருந்து திரும்பும்போது இரண்டு கைகளிலும் பாலிதீன் பைகளோடு வருவதை தவிர்க்க கடைக்கு செல்லும்போதே தேவையான அளவு துணிப்பைகளை எடுத்துச் செல்லலாம்.
- தொழிற்சாலைகள் தாமாக சுத்தகரிப்பு மையங்களை நிறுவி கழிவுகள் சுத்தகரிப்பு செய்த பின் வெளியேற்ற வேண்டும்.
- சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வினை ஒவ்வொரு மாணவனும் தனி மனிதனும் பெற வேண்டும், அது பற்றிய ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமளித்தல் வேண்டும்.
- இயற்கைக்கு ஊறு விளைவிக்கும் எந்த ஒரு செயலும் பொருளும் தடை செய்யப்பட வேண்டும்.

இயற்கை நமக்களித்த செல்வங்களை தகுந்த முறைகளில் அளவோடு பயன்படுத்தினால் நமது மனித குலம் மென்மேலும் செழிப்பது உறுதி.

*******

## வாடாத பூ...,

செண்பகப் பூ வாடிவிடும்
மல்லிகைப் பூ வாடிவிடும்
ரோஜாப் பூ வாடிவிடும்
வாடாத பூ எதுவோ
வளர்கின்ற இடம் எதுவோ
வாடாத பூ அறிந்தேன்
வளரும் இடம் அறிந்தேன்
வாடாத பூ படிப்பு
வளரும் இடம் பள்ளிக்கூடம்

திரு.மு.வரதராசனார் அவர்கள்

## கோடைப்பயிர்

உன்
மனநிலத்தை
கட்டுப்பாடு என்ற ஏறால்
உழுது போடு

வீண் ஆசை
என்ற களைகள்
காய்ந்து போகட்டும்

அதில்
லட்சிய விதைகளைத் தூவு
முயற்சி உரமிடு
அது முன்னேற்ற விளைச்சலை
முழுமையாய் தரும்
உனக்கு

செ.ஜ. அருள் பிரசாத்
B.Ed பயிற்சி ஆசிரியர்

## ஆசிரியர்கள்

அறிவோடு அன்பையும்
ஆற்றலோடு அரவணைப்பையும்
கதையோடு கலைகளையும்
காலத்திற்கேற்ற கல்வியையும்
கற்றுக் கொடுக்கும் கவரிமான்கள்
பணத்தை பெரிதாக நினைக்காமல்
பாடத்தை போதிக்கும் நல் உள்ளங்கள்
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டைக்
கற்பித்து கடமையாற்றும்
கலங்கரை விளக்கங்கள்

## Teacher என்றால்?

| | |
|---|---|
| T | Tender Heart |
| E | Education |
| A | Ability |
| C | Character |
| H | Honesty |
| E | Effort |
| R | Responsibility |

ப. எலிசபெத் ராணி
இடைநிலை ஆசிரியை

# எதிர்பார்ப்பு



அரவணைக்கும் தாயாய் நம் ஆசிரியர்கள்
ஆதரிக்கும் சேயாய் நம் மாணவர்கள்
கதிரவன் தோன்றி மறையும் வரை
உழைக்கும் உழவர்களாய் நம் ஆசிரியர்கள்
கற்பிக்கும் பாடத்தை கவனமாய் பயிரிடும்
நம் பள்ளி மாணவர்கள்
அறிவென்ற உளியால் செதுக்கும் சிற்பியாய்
நம் ஆசிரியர்கள்
அறிவாற்றல் மிக்க முழுமையான சிற்பமாய்
நம் பள்ளி மாணவர்கள்
தவறிழைக்கும் மாணவர்களை கனிவோடு
கண்டிக்கும் தோழனாய் நம் ஆசிரியர்கள்
கனிவோடு பேசியதை, பணிவோடு கேட்டு
பணிந்து போகும் நம் பள்ளி மாணவர்கள்
அயராது உழைத்து பலனை எதிர்பார்த்து
உறக்கமற்றவர்களாய் நம் ஆசிரியர்கள்
நூறு சதவீத விழுக்காட்டை
பெற்றுத் தருவதில் முழுமுயற்சியுடன்
நம் பள்ளி மாணவர்கள்..,

கை. சுடரொளி
ஓவிய ஆசிரியை





**ஜெ. திவ்யா XI A**

## என்னால் மட்டும் முடிந்தது எப்படி?

**(10 ம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவி பேட்டி)**

அந்த மாலை நேரத்தில் ஆசிரியர்கள் அறைக்குள் நுழைந்த அந்த சிறுமியை அனைவருமே அறிந்திருந்தனர். அரசு ஆண்டு பொதுத்தேர்வில் பள்ளி அளவில் **500** க்கு **469** மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்றதற்காக பேட்டி என்று சொன்னதும், மிகுந்த மகிழ்ச்சியுடன் தயாரானார். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கேள்விக் கனைகளைத் தொடுக்க நிதானமாக பளிச் பதில்களை உதிர்த்தார், இனி அந்த பேட்டியிலிருந்து.,

**உன்னைப் பற்றி?**

நான் இதே ஊரை சார்ந்தவள்தான், எனது தந்தை விவசாய வேலை பார்க்கிறார். அம்மா வீட்டு வேலைகளைக் கவனித்து கொள்கிறார். அக்கா கணினி அறிவியலில் பட்டப் படிப்பு படித்துக்கொண்டிருக்கிறார். என் தம்பி இதே பள்ளியில் 8 ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறார்.

எங்கள் குடும்பம் வசதியான குடும்பம் இல்லை. அம்மாவும் அப்பாவும் 11ம் வகுப்பு வரை படித்துள்ளனர். ஆனால் எனது பெற்றோர் எங்களை மிகவும் நம்பிக்கையுடன் படிக்க வைக்கின்றனர்.

**அதிக மதிப்பெண் பெற உனது பெற்றோர் ஏதாவது அறிவுரை கூறுகின்றனரா?**

எதையும் எளிமையாக எடுத்துக்கொண்டாலே எல்லாம் எளிமைதான்னு சொல்வாங்க அப்புறம் முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை வெற்றி நிச்சயம்னு அடிக்கடி சொல்வாங்க இது என் இரத்தத்தோடே கலந்து போயிட்டு.

**உனது கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் அறிவுரை என்ன?**

பள்ளிக்கு தொடர்ந்து வருதல், நல்ல நடத்தையை மேற்கொள்ளுதல், பதற்றத்தை தவிர்த்தல், அழகாக எழுதுதல் ஆகியவற்றைப் பற்றி ஆசிரியர்கள் அவ்வப்போது அறிவுரைக் கூறுவர்

**பள்ளியைத் தவிர வேறு ஏதேனும் தனிப் பயிற்சி உண்டா?**

வகுப்பறையில் ஆசிரியர்கள் சொல்வதைக் கவனமாய் கேட்பதும், வீட்டுப் பாடங்களைச் சரியாய் செய்வதுமே போதுமானதாய் உள்ளதால், தனிப்பயிற்சிக்கு செல்வதில்லை.

தொடர்கிறது..

**படிப்பு நேரத்தைப் பற்றி?**

மாலை 6 மணிமுதல் இரவு 9.30 மணிவரை, அதிகாலை 4,30 மணிமுதல் 8.00 மணிவரை.

**பள்ளிக்கு வருகைக் குறித்து?**

தினமும் பள்ளிககு சரியா காலை 9.15 மணிக்கே வந்துவிடுவேன், இதுவரை காலதாமதமாக பள்ளிக்கு வந்ததில்லை, அதுபோல கடந்த இரண்டு வருடமாக ஒருநாள் கூட விடுப்பு எடுக்காமல் 100 சதவீதம் வருகைப் புரிந்துள்ளேன்.

**500 க்கு 500 மதிப்பெண் ஏன் எடுக்க முடியவில்லை?**

அனைத்து பாடஙகளுமே எனக்கு எளிமையாகவே இருந்தாலும் தேர்வில் ஏற்படும் கவனக்குறைவால் ஒரு சில மதிப்பெண்கள் குறைந்து விடுகிறது. எழுத்து அழகின்மையும் ஒரு காரணமாக உள்ளது. எதிர்காலங்களில் இந்த தவறுகளைப் போக்க கடுமையாக முயன்று வருகிறேன்.

**உனது முயற்சி மாநில அளவிலா? மாவட்ட அளவிலா?**

"உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்" என்பது எனக்கு பிடிக்கும் மாநில அளவு வெற்றியே எனது குறிக்கோள்.

**உனது பொழுது போக்கு என்ன?**

வீட்டில் உள்ளவர்களுடன் மகிழ்ச்சியாக பேசிகொண்டிருப்பது மட்டுமே எனது பொழுதுபோக்கு மற்றபடி தொலைக்காட்சியினை நானும் என் குடும்பத்தில் யாரும் பார்ப்பது இல்லை (கேபிள் தொடர்பும் ஒருவருடத்திற்கு முன்பே துண்டிக்க பட்டுவிட்டது).

**உனது எதிர்கால ஆசை?**

மருத்துவம் படிக்க வேண்டும் என்பதே என் ஆசை

**மற்ற பள்ளி மாணவர்களுக்கு உனது கருத்து?**

பெற்றோர், ஆசிரியர்கள் சொல்வதைக் கவனமாக கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.. எதையும் எளிமையாக எண்ண வேண்டும். அன்றைய பாடஙகளை அன்றே படிக்க வேண்டும்.

அப்புறம் ஒரு ஆசை சார்---

சொல்லும்மா,

இந்த பேட்டியை இந்த பள்ளி மாணவர்கள் எல்லாருமே கொடுக்கணும் சார்.

என்று சொன்ன சிறுமியை அனைவரும் பாராட்டி எதிர்கால ஒளிமிகுந்த வாழ்க்கைக்கு வாழ்த்துக்களைக் குவித்தனர்.

**தொகுப்பாக்கம் தி. சந்திரமோகன், தமிழாசிரியர்**


# ஓவியத்தில் கைவண்ணம்



ச, தமிழ்வேந்தன் 11 'இ'



செ. பிரியா 9 'இ'





ச. தமிழ்வாணன்
8 'ஆ'



நா. ஐஸ்வர்யா
7 'அ'

## நகைத்து மகிழ்வோம்



- அந்த பூனை ஏன் அந்த ஸ்கூலை சுற்றி வருது
  - ☺ அது எலிமெண்டரி ஸ்கூலாம்

- ஒரு பக்க மூக்கில் மட்டும் பொடி போடுறீங்களே ஏன்
  - ☺ மூக்கு பொடி போடறதை டாக்டர் பாதியா குறைச்சுக்க சொன்னார் அதான்

- டாக்டர் நீங்க 12 மணிக்கு சாப்பிட சொன்ன மருந்தை 6 மணிக்கே சாப்பிட்டுட்டேன்
  - ☺ அப்புறம் என்னாச்சு கடிகாரத்தை 12 மணிக்கு திருப்பி வைச்சிட்டேன்

ரா. ஹேமமாலினி
வகுப்பு 8 பிரிவு ஆ

- லைட் ஹவுசை கடலுக்கு அருகில் கட்டுவது ஏன்
  - ☺ லைட் ஹவுசிற்கு அருகில் கடலை வெட்ட முடியாது அதனால்தான்

- தோசையை ஏன் திருப்பி போடறாங்க
  - ☺ அதனால தானா திரும்ப முடியாது

- எது அடித்தால் வலிக்காது
  - ☺ டெலிபோன்

கே. கபிலன்
வகுப்பு 6 பிரிவு அ

# அறிவோம் ! அறிவோம் !!



| | |
|---|---|
| களின் நாடு என்றழைக்கப்படுவது | பின்லாந்து |
| ந்தியாவின் முதல் செய்தித்தாள் | BengalGazette (January 27 1780) |
| ⏭ செயற்கை மழையை கண்டுபிடித்தவர் | இர்வின் லாங்மூர் |
| ⏭ கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு | டென்மார்க் |
| ⏭ அன்னை தெரசாவின் தாய்நாடு | யுகோஸ்லாவேகியா |

✎ சி. சீதா
வகுப்பு 11 பிரிவு இ

| | |
|---|---|
| ⏭ செல்போனை உருவாக்கியவர் | மார்டி கூப்பர் 1973 |
| ⏭ உலகிலேயே மிகச்சிறிய தேசிய கீதத்தை உடைய நாடு | ஜப்பான் (4 வரிகள்) |
| ⏭ இந்தியாவில் கார் பந்தைய மைதானம் உள்ள ஒரே இடம் | சென்னை (இருங்காட்டுக்கோட்டை) |
| ⏭ 2010 உலக கால்பந்து போட்டி நடைபெற உள்ள நாடு | தென் ஆபிரிக்கா |

சிவ. சந்திர மௌலி
வகுப்பு 6

| | |
|---|---|
| ⏭ அதிக நினைவுத்திறன் உள்ள விலங்கு | யானை |
| ⏭ மின்னலின் சராசரி நீளம் | 6 கிலோமீட்டர் |
| ⏭ சர்வதேச உணவுப் பொருள் | முட்டைக் கோசு |

சே. பிரியங்கா
வகுப்பு 8 பிரிவு அ

## நம் மாநில குறிப்புக்கள்

| | |
|---|---|
| மாநில விலங்கு | வரையாடு |
| மாநில மலர் | செங்காந்தல் |
| 'சென்னை' தமிழ்நாடானது | 18-07-1967 ம் வருடம் |

த.பிரபு
9 ம் வகுப்பு அ பிரிவு

# மாணவர் கவிதைகள்

## கரை சேர்த்த கல்வி

வின்னை நேசித்தேன் மேகம் மறைந்தது
மேகத்தை நேசித்தேன் கலைந்து விட்டது
நிலவை நேசித்தேன் தேய்ந்து விட்டது
மின்னலை நேசித்தேன் மறைந்து விட்டது
கல்வியை நேசித்தேன் என்னைக் கரை சேர்த்தது

கே. கபிலன்
வகுப்பு 7 பிரிவு அ

## கதிரவன்

காலையில் உதிக்கும் கதிரவனே
மாலையில் மறையும் ஆதவனே
வானில் வருவதும் நீயே
வாழ்க்கையில் ஒளி தருவதும் நீயே
மக்களை வாழ வைப்பதும் நீயே
அவர்களை வறுத்தெடுப்பதும் நீயே
அனலாய் தகிக்கும் அற்புதமே
ஒவ்வொரு அணுவிலும் நீயே
உயிர்களை வாழவைப்பதும் நீயே

ந .ராஜகணபதி
வகுப்பு 12 பிரிவு இ

## கல்வியே உயிர்

கல்வி ஒருவனுக்கு இதயம் போன்றது
இதயமே ஒருவனுக்கு உயிர் போன்றது
உயிர் இல்லாதவன் பிணம்
கல்வி கற்காதவனும்
பிணத்தை போலவே பார்க்கப்படுகிறான்

ப .ஜெயந்தி
வகுப்பு 12 பிரிவு இ

## நட்பு

ஆயிரம் கோடி விண்மீன்கள்
வின்னில் இருந்தாலும்
இரவிற்கு அழகு நிலவுதான்
ஆயிரம் உறவுகள்
மன்னில் இருந்தாலும்
வாழ்க்கைக்கு அழகு நல்ல நட்புதான்

பி. நித்யா
வகுப்பு 12 பிரிவு ஆ

## தோல்வி துவளுவதற்கல்ல

தோல்வி அடைந்தாயா, கவலைப்படாதே
தோல்வி அடைந்தவன் இறப்பதென்றால்
சாதனைப் படைத்தவன் அப்போதே இறந்திருப்பான்
வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது உன் மனமே
தோல்வியை வெற்றியாக மனம் கருதுமானால்
நீயே சாதனை படைப்பவன்
நம்பிக்கை, முயற்சி இதுவே உன் மனதில் இருந்தால்
தோல்வி என்ற கொள்ளிக்கட்டை அணைந்து
வெற்றி என்ற அணையா தீபம் மனதில் எரியும்

கு.பிரபு
வகுப்பு 12 பிரிவு ஆ

## எதுவும் எளிமையே

நினைத்துப் பார்க்கையில் நெடுந்தூரமானது
நடந்து சென்றபின் அண்மையாய் ஆனது
எடுத்துப் பார்த்த நூல் மலையாய் தெரிந்தது
படித்து முடித்தபின் மலைப்பு மறைந்தது
சுவைத்து பார்க்கையில் கசந்த வேப்பிலை
சில நாள் உண்டபின் கசப்பு மறைந்தது
பழகிப் போய்விடின் எதுவும் எளிதெனப்
பாட்டி சொன்ன உண்மைப் புரிந்தது
முடியாதென்பது முயலாதோர் வாதமே
முடியும் என்பது முயல்வோரின் வேதமே

ப .ஆஸ்லின் ரேஸ்மா
ப்பு 10 பிரிவு

# அடுத்த இதழில்



| | |
|---|---|
| * ஜூனியர் ரெட்கிராஸ் இயக்கம் | திரு எச் ராதாகிருஷ்ணன் B.T Asst |
| * உயிரை விட மேலானது ஒழுக்கமே | திரு.ஆ முருகதாஸ் B.T Asst |
| * அசோக சக்கரத்தின் 24 தர்மங்கள் | திருமதி. வே. சுபத்ரா B.T Asst |
| * மனித நேய கவிதை | திருமதி வ. அட்சர சுந்தரி B.T Asst |
| * ஓவியக் கலை | திருமதி கை. சுடரொளி ஓவிய ஆசிரியை |

இவற்றுடன்.,

* ஆசிரியர்களின் திறன்மிகு கட்டுரைகள்
* மலர் பற்றிய கருத்துக் கடிதங்கள்
* மாணவர்களின் கவிதைகள்,
  கட்டுரைகள்,
  நகைச்சுவைகள்,
  தகவல்கள்,
  ஓவியங்கள்.

இன்னும் பல சிறப்பம்சங்களுடன்.,

விரைவில் உங்கள் கைகளில்.,

மாணவர்களே முயன்று எழுதுங்கள், முடிந்தவரை சுயமாக எழுத பழகுங்கள் எழுதுவதற்கான கருவோடு உங்கள் ஆசிரியர்களை சந்தியுங்கள் அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.